மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பொதுவாக முப்பது இலட்சம் ரூபாய் இருக்கும் என்று குறிப்பிட்டேன். அதிலே மாநில சர்க்காருடைய சொத்துக்கு ஏற்பட்ட சேதம் மிகக் குறைவாகத்தான் இருக்கும்.

* 383 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the students prevented a Hindi film producer from shooting a film at Ootacamund ; and

(b) whether any protection has been given to the producer by the Government to resume the shooting of the film ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) மாணவர்கள் சிலர் படம் எடுப்பதற்கு மறுப்பு தெரிவித்தனரே தவிர, படம் எடுப்பதைத் தடுக்க வில்லை.

(இ) படத் தயாரிப்பாளர் வேண்டுகோளின் மீது காவலர் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசைப் பொறுத்த மட்டில், மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்றாலும், ஆங்காங்கே மொழிப் பிரச்சினை என்ற அடிப்படையில், இந்தி எதிர்ப்பு என்ற பெயரில் பொதுச் சொத்துக்கள் நஷ்டப்படுத்தப்படுகின்றன. இம் மாதிரி சம்பவங்கள் ஆங்காங்கு நடைபெறுகின்றன. ஆகவே, இப்படிப் பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க அரசு ஏதாவது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எந்தச் சம்பவம் எங்கே நடை பெற்றது என்று உறுப்பினர்கள் குறிப்பிட்டால் அதுபற்றி நடவடிக்கை எடுக்க இயலும்.

திரு. பெ. மலைச்சாமி: உதகையில் நடந்த இந்த நிகழ்ச்சிக்குக் காரணம், பம்பாயில் திரையிடப்பட்ட சில தமிழ்ப் படங்களுக்கு அங்குள்ள சிவசேனையினர் எதிர்ப்புத் தெரிவித்ததுதான் என்பதும், அதன் காரணமாகத்தான் இந்த நிகழ்ச்சி நடந்தது என்பதும் அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதனுடைய எதிரொலியாகவும் இந்த நிகழ்ச்சி நடந்தது என்பது உண்மைதான். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் மறுப்பு தெரிவித்தனரே தவிர, தங்களு டைய தமிழ்நாட்டுப் பண்பினைக் காப்பாற்றிக் கொண்டார்கள்.

திரு. கே. விநாயகம்: உதகையில் நடைபெற்ற இந்த சம்பவம் பின்னால் நடந்தது என்றும், அதற்கு முன்னால்தான் சிவசேனைக் கிளர்ச்சி நடந்தது என்றும் சொல்வது சரியல்ல. வட நாட்டவர்களின் படங்களை எடுக்கக்கூடாது என்று நாம் கிளர்ச்சி செய்ததன் விளைவாகத் தான் அங்கு நமது தமிழ்ப் படங்களைக் காட்டக்கூடாது என்று அங்கிருப் பவர்கள் கிளர்ச்சி செய்தார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எது உண்மையாக இருந்தாலும், அந்த எதிரொலி இங்கேயும், இந்த எதிரொலி அங்கேயும் மாறிமாறி ஒலித்தன.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஐயா, இந்திப் படங்களில் ஆபாசக் காட்சிகள் அதிகமாக உள்ளன, நமது பண்பாட்டுக்கு அது உகந்த தல்ல என்ற காரணத்தால் நமது மாணவர்கள் இந்திப் படங்களை எதிர்த்தார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: "நில்-கவனி-காதலி" என்ற படத்தினுடைய சுவரொட்டிகளைப் பார்க்கும்போது, ஆபாசத்திற்கு நாம் மற்ற படங்களைக் குறை கூறிப் பயன் இல்லை. (சிரிப்பு).

1969 மார்ச் 20]

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether the Government will come forward to take action against the producers of "Nil, Gavani, Kathali" (நில்–கவனி–காதலி) (சிரிப்பு).

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்தச் சுவரொட்டிகள் சம்பந்தமாக போலீஸ் அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அமைச்சர்கள் விஜயத்தின் போது முன்னெச்சரிக்கையாகக் கைதானவர்கள்.

***384 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) 1968 மே மாதத்தில் முன்னாள் உணவு வருவாய், பொதுப்பணித் துறை அமைச்சர்கள், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது முன்னெச்சரிக்கையாகக் காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டார்களா?

(இ) ஆம் எனில், ஊர்வாரியாக எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) மதுரை நகரத்தில்: 1968–ம் ஆண்டு மே மாதம் 23-ம் நாளன்று குற்ற இயல் நடைமுறை விதிக்கோவையின் 151-வது பிரிவின் கீழ் 382 பேர் கைது செய்யப்பட்டார்கள். விசாரணைக்காக 261 பேர் அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆனால், அவர்கள் அனைவரும் 23—5—1968 அன்று மாலை விடுதலை செய்யப்பட்டார்கள்.

மதுரை வடக்கு : தமிழக அமைச்சர்களுக்கு முன்பாக கருப்புக் கொடி காட்ட மதுரை புறப்படும்போது, சோழவந்தானில் 22–5–1968-ம் தேதி இரவு இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த 12 பேர்கள் தடுப்பு முறை அடிப்படையில் கைது செய்யப்பட்டனர். அவர்களும் அன்று மாலை விடுதலை செய்யப்பட்டார்கள்.

இராமநாதபுரம்: 26—5—1968-ல் தமிழக நிதி அமைச்சர் அவர்கள் திருப்புவனம் வந்தபோது 61 காங்கிரஸ் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களும் கைது செய்யப்பட்ட அன்று மாலை விடுதலை செய்யப்பட்டார்கள்.

திரு. ஏ. முனியாண்டி : தலைவர் அவர்களே, அவர்கள் அத்தனை பேருமே வெளியார்கள்—சம்பளம் கொடுத்துக் கூப்பிட்டுக்கொண்டுவரப் பட்டவர்கள்—என்ற செய்தி அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 382 பேர் கைது செய்யப்பட்டவர்களில் 261 பேர் வெளியூரிலிருந்து வந்தவர்கள். அவர்கள், ஏன் வந்தார்கள் என்று விசாரிக்கப்பட்டார்கள் என்ற அளவிலேதான் இங்கு விவரம் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதுபோன்று எதற்காக அவர்கள் கைது செய்யப்பட வேண்டும்? இப்படிக் கைது செய்வது, மேலும் காங்கிரசைப் பலப்படுத்தக்கூடிய தன்மையில், அவர்களுக்கு விளம்பரம் கொடுக்கக்கூடிய தன்மையில் உள்ளது என்பதை முதலமைச்சர் அவர்கள் உணருகிறாரா? இனிமேலாவது அப்படிக் கைது செய்வது நிறுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பொதுவாக, அமைச்சர்கள் பொது நிகழ்ச்சியில் அல்லது அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளச் செல்லும்போது கருப்புக் கொடி பிடிப்பதை அரசாங்கத்தின் சார்பில் போலீஸ் அதிகாரிகள் யாரும் தடுத்ததான நிகழ்ச்சி எதுவும் இல்லை. வன்முறை தலைகாட்டும், குழப்பம் ஏற்படும், அமைதி வினையும் என்று